செய்தி வெளியீடு – 2.7.2010

# ஜம்மு–காஷ்மீர் மாநிலத்தில் தீவிரவாதிகளின் தாக்குதலில் வீரமரணம் அடைந்த தமிழகத்தைச் சேர்ந்த 3 இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு தலா 5 இலட்சம் ரூபாய் வீதம் 15 இலட்சம் ரூபாய் நிவாரண உதவி!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

ஜம்மு–காஷ்மீர் மாநிலத்தில் அண்மையில் தீவிரவாதிகளுடன் ஏற்பட்ட துப்பாக்கி சண்டையின்போது, தமிழகத்திலுள்ள திருவண்ணாமலை மாவட்டம் காட்டுக்காநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த சரவணன்; கிழக்குமேடு கிராமத்தைச் சேர்ந்த ஆர்.பன்னீர்செல்வம்; சிவகங்கை மாவட்டம் சிறியூர் கிராமத்தைச் சேர்ந்த நாகலிங்கம் ஆகிய மூன்று இராணுவ வீரர்களும் வீரமரணம் அடைந்தனர். இதுகுறித்த தகவல் கிடைத்தவுடன் மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உயிரிழந்தவர்களின் குடும்பத்தாருக்குத் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தார்கள். அத்துடன், உயிரிழந்தவர்களின் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் தலா 5 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 15 இலட்சம் ரூபாய் கார்கில் படைவீரர்கள் நிவாரண நிதியிலிருந்து நிவாரண நிதியாக வழங்கிடவும் முதலமைச்சர் கலைஞர் இன்று (2.7.2010) ஆணையிட்டுள்ளார்.

* * *